# திருத்துறைப்பூண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பேரிடர் மேலாண்மை பயிற்சி

திருவாரூர் மாவட்டத்தில், அரக்கோணம் 04 வது பட்டாலியன் (NDRF)தேசிய பேரிடர் மீட்பு படையினர், டீம் கமாண்டர் சதீஷ்குமார் அவர்கள் தலைமையில் 14 நாட்கள் முகாமிட்டுள்ளனர். மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி, தேசிய பேரிடர் மேலாண்மை பாதுகாப்பு சட்ட விதிப்படி, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இயற்கை பேரிடர் நிகழும் பகுதிகளை ஆராய்ந்து மற்றும் வெள்ளம் புயல் நிலநடுக்கம் சுனாமி நிலச்சரிவு இரசாயன கசிவு (விசவாயு தாக்குதல்) போன்ற பேரிடர் குறித்து கல்லூரிகளில் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் இயற்கை பேரிடர் காலங்களில் தங்களை எவ்வாறு தற்காத்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியும் செய்முறை பயிற்சியும் செய்து காட்டி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக திருத்துறைப்பூண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் **16** ம் தேதி தேசிய பேரிடர் மேலாண்மை பாதுகாப்பு குழுவின் சதீஷ்குமார் மற்றும் சசி குமார் தலைமையில் பயிற்சி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பேரிடர் கால வட்டாட்சியர் பரஞ்சோதி, திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் கார்ல் மார்க்ஸ், துணை வட்டாட்சியர் ஜோதி பாஸ், வருவாய் ஆய்வாளர் நடராஜன், கிராம நிர்வாக அலுவலர் வினோத் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் முன்னிலை வகித்தனர், கல்லூரி முதல்வர் மாறன் அவர்கள் வரவேற்றார், இறுதியாக இணைப்பேராசிரியர் கார்த்திகேயன் நன்றி கூறினார். இதில் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு, நேரடி பயிற்சி பெற்றத்துடன், பேரிடர் குறித்த சந்தேகங்களையும் கேட்டு தெளிவுபடுத்திக்கொண்டார்கள்


அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருத்துறைப்பூண்டி-614 7 5 . திருவாரூர் மாவட்டம்.


NATIONAL DIS
RESPONSE
04 BN NDRF A
EDUCORP
TECHNOLOGIES




DISASTER
FORCE
RAKKONAM
EDUCORP
TECHNOLOGIES






NATIONAL
04 BN NDRF


NDRF
INDIA


IONAL DISASTER
SPONSE FORCE
NDRF ARA KONAM


ONSE FORCE
NDRF ARA ONAM


NATIONAL DISASTER
RESPONSE FORC
04 BN NDRF ARAKKON


NATIONAL DISASTER
RESPONSE FORCE
04 BN NDRF ARAKKONAM





